## முகவுரை

இனி, கடைசசங்க காலத்திற்குப் பல நூற்றாண்டுகளின் பின்பு, கம்பர் முதலிய புலவர் பெருமக்கள் விளங்கிய காலத்திலோ, சிறிது முன்னாகவோ மகளிரில் ஒருவர் தலை சிறந்த புலமை யுடையராய்த் திகழ்ந்து, அக்காரணத்தானே சங்க காலத்து ஔவையார் பெயரைச் சிறப்பாக எற்று, அதனானே வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆத்திசூடி முதலிய நூல்களெல்லாம் இவரியற்றியனவே யாகும். ஔவையார் பெயருடன் இயைத்து எழுதப்பட்டும், செவியாறதாகவும் வழங்குகின்ற கதைகள் அளவில்லாதன. அக்கதைகளெல்லாம் முன்ஔவை பின்ஔவை யென்னும் பாகுபாடின்றியே வழங்குகின்றன. புலவர் புராணமுடையாரே ஔவையார் இருவரெனத் துணிந்து,

'முன்னௌவை கலிவருட மூன்றாவ தாயிரத்தாள்
பின்னௌவை நான்காவ தாயிரத்திற் பிறந்திட்டாள்'

எனக் கூறினர்.

தமிழ் நாவலர் சரிதையில் நாற்பத்தொரு செய்யுட்கள் ஔவையா ரியற்றியனவாக அவர் பாடிய வரலாற்றுக் குறிப்புடன் உள்ளன. அவற்றுள் ஒன்றே புறநானூற்றிலுள்ளது. அதியனையும், புள்வேளூர்ப் பூதனையும், சேரமானையும், நாஞ்சில் வள்ளுவனையும், எழிற்கோவையும் பாடிய பாட்டுகளும், அங்கவை சங்கவை யென்னும் பெண்களுக்கு மணமுடித்தற்காகப் பாடிய பாட்டுகளும் சங்ககாலத்துடன் இயைந்துள்ளன. ஒரு சில தொல்காப்பிய வுரையில் மேற்கோளாகவும் வந்துள்ளன. பிறவற்றைப்பற்றி ஒன்றுங் கூறுமாறில்லை. கதையாற் சங்க காலத்துடன் இயைந்திருக்கின்ற பாட்டுகளுள்ளும் பல தாம் ஔவையார் வாக்கல்ல வென்பதைக் காட்டிக்கொண் டிருக்கின்றன. அங்ஙனமாக, விநோத ரசமஞ்சரி முதலியவற்றிற் காணப்படும் "எட்டேகால்

